STC.No.255/2025 PW1. காசிமாயன்
தேதி– 18.02.2026
எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) 24.10.2024 ல் நான் அனுப்பிய அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டாரா என்றால் பெற்றுக்கொண்டார். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்னதுபோல் ஒரு ஆவணம் நீதிமன்றத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் வேறு நபர் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்நீதிமன்றத்தில் வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், தற்போது இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 23.11.2024 ல் நான் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிரியின் முகவரி தவறு என்று திருப்பி அனுப்பப்பட்டதற்கான ஆவணமாகும்.

2. காசோலையில் என்ன மொழியில் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. காசோலையை யார் நிரப்பினார் என்றால் எதிரி அவரது வீட்டில் நிரப்பி கொண்டு வந்தார். எதிரிக்கு ஆங்கிலத்தில் எழுத, படிக்க தெரியாது என்றும், காசோலையை அவர் பூர்த்தி செய்யவில்லை என்றால் அவர் எழுதி கொண்டுவந்து என்முன்னிலையில் கையொப்பம் செய்தார். எதிரி காசோலையை கேரளா மாநிலத்தைச்சேர்ந்த சிபி என்பவரிடம் கொடுத்தார் என்றும், அவரிடம்தான் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தார் என்றும், எதிரி கணக்கை முடித்துவிட்டு சிபி காசோலையை திருப்பி தராததால் கேரளா காவல்நிலையத்தில் அவர்மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) சிபி என்பவரிடமிருந்து காசோலையை வாங்கி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு தொகை கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் நகையை கனரா வங்கியில் அடகு வைத்துள்ளேன். எதிரி

இந்நீதிமன்றத்திற்கு வந்தபிறகுதான் அவரை முதன்முறையாக தெரியும் என்றால் சரியல்ல, அவரை எனக்கு 6 வருடமாக தெரியும். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.02.18 17:05:37 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam